[1983 பிப்ரவரி 12

அரசினர் சார்பில் ஓட்டுநர் பயிற்சி அளிக்கும் திட்டம்.

*வினா எண். 254. திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்ரமணியன் திரு. செ. செம்மலை: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் ஓட்டுனர் உரிமம் பெறுபவர்களுக்கு பயிற்சி அளிக்க அரசே ஓட்டுனர் பயிற்சி அளிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உண்டா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : ஆம்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்து அதிகாரிகள் என்னதான் கடுமையாக விதிகளை வைத்திருந்தாலும் தனியாக ஓட்டுநர் பயிற்சி நிலையங்களில் அவசர அவசரமாக பயிற்சி கொடுத்து அனுப்பிவிடுகிறார்கள். ஆகவே தனியார் ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிகளை தடைசெய்து அரசே ஏற்று நடத்த முன் வருமா ? எத்தனை ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிகள் ஆரம்பிக்க அரசு உத்தேசித்துள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்டந்தோறும் ஓட்டுநர் பயிற்சிப்பள்ளிகள் நிறுவவேண்டுமென்பது அரசினுடைய கொள்கை. உடனடியாக ஒரே ஆண்டில் செய்யமுடியாது என்பதால் முதலில் ஐந்து இடங்களில் செய்து முடித்துவிட்டு அதற்கு பின் அடுத்த ஆண்டில் எல்லா இடங்களிலும் ஏற்படுத்துவதற்கு முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறோம். அதற்கு பின் தான் தனியார் பயிற்சிப் பள்ளிகளை தடை செய்வதைப்பற்றிய பிரச்னையை யோசிக்க வேண்டும்.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட பயிற்சி நிலையங்கள் தமிழகத்தில் எந்தெந்த இடங்களில் இருக்கின்றன? மாவட்ட அளவில் ஆரம்பிப்பதற்கு முன்னால் தற்போது இருக்கிற பயிற்சி நிலையங்களை விரிவு படுத்துவதற்கு செயல்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9.50)

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, தற்போது ஒரே ஒரு இடத்தில்—கும்மிடிப்பூண்டி என்ற இடத்தில் மட்டும் அதை நடத்தி வருகிறோம். அது போக்கு வரத்துக் கழகத்தின் சார்பாக, போக்குவரத்துக் கழகங்களுடைய நிதி உதவியோடு நடந்து வருகிறது. நாம் இப்பொழுது, அரசினுடைய சார்பாக ஒவ்வொரு மாவட்டத்திலேயும் செயல்படுத்த வேண்டுமென்று முயற்சி எடுக்கிறோம். எனவே, அப்படிப்பட்ட முயற்சி வெற்றி பெறுகின்ற நேரத்திலேதான் தனியார்களைப் பற்றி சிந்தித்து, அவர்களை நீக்கிவிட்டு முழுமையாக அரசினுடைய சார்பாக அவைகளைச் செயல்படுத்த முடியும்.

1983 பிப்ரவரி 12]

திரு. தி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிகளை அரசு நிர்வாகத்திலுள்ள எல்லா போக்குவரத்துக் கழகங்களிலும் துவக்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: போக்குவரத்து கழகங்களில் அந்தந்தப் போக்குவரத்துக் கழகங்களுடைய தொழிலாளர்களுக்குப் பயிற்சி கொடுக்கவேண்டுமென்பதற்காக இப்பொழுது தனியாக வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இப்பொழுது நாம் அமைப்பது, பொதுவாக, போக்குவரத்துக் கழகங்களுக்கும், தனியார்களுக்கும் சேர்ந்து அந்த ஓட்டுநர்கள் பயன்படவேண்டுமென்ற முறையிலேதான் நாம் செய்கிறோம். எனவே, அந்த வகையிலே செய்யக்கூடியது, அரசாங்கம்தான் பொறுப்பை ஏற்றுக்கொண்டு செய்யும், போக்குவரத்துக் கழகங்கள் அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளாது.

நட்டத்தில் செயல்பட்டுவரும் போக்குவரத்துக் கழகங்கள்.

வினா எண் 255—திரு. கே. நாராயணசாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு போக்குவரத்துக் கழகங்கள் இழப்பில் செயல்படுவது உண்மையா ?

(ஆ) ஆம் எனில் கழகங்கள் வாரியாக இழப்பு தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) 1981-82ஆம் ஆண்டு கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகமும், சேரன் போக்குவரத்துக் கழகமும் இலாபத்தில் இயங்கின. இதர போக்குவரத்துக் கழகங்கள் நட்டத்தில் இயங்கின.

(ஆ) இழப்பில் இயங்கிய போக்குவரத்துக் கழகங்களின் இழப்பு விவரம் பின்வருமாறு :—

போக்குவரத்துக் கழகங்கள்.	இழப்புத் தொகை (ரூபாய் இலட்சத்தில்.)
பல்லவன் போக்குவரத்துக் கழகம் (பெருநகர்) ..	768.91
பல்லவன் போக்குவரத்துக் கழகம் (புறநகர்) ..	171.40
பாண்டியன் சாலைப் போக்குவரத்துக் கழகம் ..	6.92
சோழன் சாலைப் போக்குவரத்துக் கழகம்	146.34
அண்ணா போக்குவரத்துக் கழகம்	101.53
தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம் ..	142.36
திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம்	276.93

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS